(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

முதலாம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

## 1st Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ் Tamil | Three Hours | 72 | T | I,II |
| | Gr -12 (2024) | | | |

❖ **பகுதி I இல் மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் "அ" பிரிவில் ஒரு வினாவுக்கும் "ஆ" பிரிவில் ஒரு வினாவுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி I

**01) பின்வரும் செய்யுளை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

**அ)** பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல் வனப்பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉம் நுதலு நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்கு திரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே

i. இச் செய்யுளில் இடம்பெற்றுள்ள முதல், கரு, உரிப் பொருட்களைத் தருக.
ii. தலைவனைப் பிரிவதற்கு முன்னர் இருந்த தலைவியின் அழகு நலன் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?
iii. இச் செய்யுளில் நெய்தல் நிலச் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**ஆ)** எலி எலாம் இப்படை அரவம் யான் என
ஒலி உலாம் சேனையை உவந்து கூவினான்
வலி உலாம் உலகினில் வாழும் வள் உகிர்ப்
புலி எலாம் ஒரு வழிப் புகுந்த போலவே

i. இச் செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
ii. குகனது வீரம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?
iii. குகனது படைகளின் வீரம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

(10 + 10 = 20 புள்ளிகள்)

**02) மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. நன்னூலார் குறிப்பிடும் சார்பெழுத்துக்களின் வகை.
   1) 10  2) 16  3) 24  4) 18  5) 30  (………)

2. பின்வருவனவற்றுள் அரை உயிர் எழுத்துகள்.
   1) ட், ண்  2) ய், வ்  3) க், ப்  4) ஐ, உ  5) இ, எ  (………)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

3. தற்காலத் தமிழ்மொழி இறுதியில் இடம்பெறாத எழுத்துக்களை மட்டும் கொண்ட தொகுதி.
   1) அ, இ, எ,   2) உ, ஏ, ஒ   3) ஐ, ஒ, ஔ
   4) ஒ, ஔ, எ   5) ஈ, ஏ, ஆ   (………)

4. பின்வருவனவற்றுள் வேற்றுநிலை மெய்மயக்கம் இடம்பெறும் சொல்.
   1) மார்பு   2) பாக்கு   3) உப்பு   4) பச்சை   5) கன்னி   (………)

5. பின்வருவனவற்றுள் நெடிற்றொடர்க் குற்றியலுகரமாக அமையும் சொல்.
   1) வராது   2) பேசாது   3) மாடு   4) கொக்கு   5) காற்று   (………)

6. பின்வருவனவற்றுள் வெடிப்பொலி இடம்பெறும் சொல்.
   1) மணல்   2) அருள்   3) இம்மை   4) உள்ளம்   5) கற்பு   (………)

7. "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதொழுவாள்" எனும் தொடரில் உயிரளபெடை இடம்பெற்றுள்ள சொல்.
   1) தெய்வம்   2) கொழுநன்   3) தொழாஅள்   4) தொழு   5) எழுவாள்   (………)

8. பின்வருவனவற்றுள் உகரம் இதழ் குவித்து உச்சரிக்கப்படும் சொல்.
   1) பாக்கு   2) படகு   3) பஞ்சு   4) முயல்   5) இருமல்   (………)

9. ஐகாரக் குறுக்கம் கொள்ளும் மாத்திரை அளவு.
   1) $\frac{1}{2}$   2) $\frac{1}{4}$   3) 1   4) 2   5) 3   (………)

10. அகச் சுட்டாக அமையும் சொல்.
    1) எது   2) ஏது   3) அவ்வீடு   4) அது   5) யாது   (………)

(10 x 2 = 20 புள்ளிகள்)

**03)** பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினைத் தெரிந்து 300 – 350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுக.

அ) எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.

ஆ) பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவோம்.

இ) இயற்கையும் மனித வாழ்வும்.

ஈ) இளந் தலைமுறையினரும் கைத்தொலைபேசிப் பாவனையும்.

உ) முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்தரின் தமிழ்ப்பணிகள். (20 புள்ளிகள்)



kalvi.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

### "அ" பிரிவு

**04)** திருக்குறள் ''பெரியாரைத் துணைக்கோடல்'' என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனற்றை விளக்குக.

அ) பெரியோரது இலக்கணமும் அவரைத் துணைக் கொள்வதன் அவசியமும்.

ஆ) பெரியாரைத் துணைக் கோடலின் சிறப்பு

இ) பெரியாரைத் துணைக் கோடலின் பயன்

ஈ) பெரியாரைத் துணையாகக் கொள்ளாதவிடத்து ஏற்படும் குற்றம். *(20 புள்ளிகள்)*

**05)** பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றினை விளக்குக.

அ) பாரதியின் இசைமீதான ஈடுபாடு குயற்பாட்டின் ஊடாக வெளிப்படுமாறு.

ஆ) குகப்படலத்தில் கங்கையின் வட கரையை வந்தடைந்த பரதனது படைகள் பற்றிய விபரிப்பு.

இ) தமிழ்த் தொண்டு எனும் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு தமிழுக்கு ஆற்ற வேண்டிய பணிகள்.

ஈ) தியாகம் எனும் சிறுகதையில் கதிரேசன் செட்டியார் தனது ஊழியர்களின் நலனில் அதிக அக்கறை உளளவர் என்பது வெளிப்படுமாறு. *(20 புள்ளிகள்)*

Education கல்வி அධ්‍යාපන

### "ஆ" பிரிவு

**06)** அ) சங்க காலத்தெழுந்த எட்டுத்தொகை நூல்களைத் தருக.

ஆ) சங்ககால அகத்திணை இலக்கியங்களின் பிரதான பண்புகளை விளக்குக.

இ) சங்ககாலப் புலவர்கள் இயற்கை மீது கொண்ட ஈடுபாடு சங்கப்பாடல்களின் ஊடாக வெளிப்படுமாற்றைச் சுருக்கமாக விளக்குக. *(20 புள்ளிகள்)*

**07)** அ) சங்க காலத்தெழுந்த ஆற்றுப்படை இலக்கியங்களைத் தருக.

ஆ) காஞ்சித்திணை, பாடாண் திணை குறித்துச் சுருக்கமாக விளக்குக.

இ) நெடுநல்வாடை புறத்திணை இலக்கியமாகக் கருதுவதற்கான காரணங்களைச் சுருக்கமாக விளக்குக. *(20 புள்ளிகள்)*



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினுடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page